[1994 மே 5

தட்டும் ஒலி) அதைப்போல, ''தொழிலும் வளரணும், சுற்றுப் புறச் சூழலும் பாதுகாக்கப்படணும்'' என்பதே மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய லட்சியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 533, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

533—

இளம் விதவைகள் மறுவாழ்விற்கு அரசு உதவியளித்தல்.

*33238—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறுமணம் செய்துகொள்ள விரும்பும் இளம் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு மறுமணம் செய்து வைக்கத் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) விதவைகளை மணம் செய்து கொள்பவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) அரசு ஆய்வு செய்யும்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கோரிக்கையற்றுக் கிடக்குது வேரில் பழுத்த பலா'' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் விதவைகளைப்பற்றி பாடியுள்ளார்கள். சமுதாயத்திலே, பல சமூகப் பிரிவில், மறுமணம் முழுமையாக, மரபு வழியாக மறுக்கப்படுகிறதே; மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியிலே, எத்தனையோ மாற்றங்களைச் செய்து வருகிறார்கள். இந்தச் சமூகக் கட்டுப்பாட்டினைத் தகர்த்தெறிந்து, மறுமணத்தை விரும்புபவர்களை, மாவட்ட சமூக நலத் துறைக்கு

விண்ணப்பிக்க வைத்து, அதை ஒரு விளம்பரத்தின் மூலமாக விண்ணப்பிக்க வைத்து, சமூக நலத் துறையினுடைய ஒரு நல்ல அதிகாரியை வைத்து நெகோசியேட் செய்து அந்த மறுமணத்தை மறுக்கிற அந்தப் பெற்றோர்களுடைய மனதை மாற்றி, மறுமணத்தைச் செய்து கொடுப்பதற்கு அரசே முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையில் இருக்கின்ற அனைத்து அதிகாரிகளும் நல்ல அதிகாரிகள்தான். மறுமணத்திற்கு விரும்பக்கூடியவர்கள், மாவட்ட சமூக நலத் துறையிடத்தில், திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கருதக்கூடியவர்கள், இப்போதும், விண்ணப்பிக்கிறார்கள். அவர்கள், நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கிறார்கள். அப்படி விண்ணப்பிக்கக் கூடியவர்களுக்கு நிதியுதவியை சமூக நலத் துறை இப்போதும் வழங்கிக்கொண்டு இருக்கிறது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை ஊக்குவிப்பதற்காகவே ரூபாய் ஐந்தாயிரத்தை, ஏழு ஆண்டுகளுக்கு சிறுசேமிப்புப் பத்திரமாக வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால் மறுமணத்திற்கு நெகோசியேட் செய்வது என்பது, சரியாக நடைமுறைக்கு ஒத்து வராது. தொழிற்சாலை போன்றவைகளாக இருந்தால் பரவாயில்லை. திருமணம் என்பது அந்தந்தக் குடும்பத்திலே தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த விதவை மறுமணத்தை ஊக்கப்படுத்தக் கூடிய வகையிலே, அதற்கு ஆதரவு தெரிவிக்கக் கூடிய வகையிலே, அரசாங்கம், சமூக நல வாரியத்தின் மூலமாக மக்களுடைய மனதை மாற்றுதவதற்குரிய பிரச்சாரங்களைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே விதவைகளுக்கான கட்டுப்பாடுகளாக, பூ வைக்கக் கூடாது; பொட்டு வைக்கக் கூடாது என்பதும், வெள்ளைப் புடவைகளைக்கட்டிக் கொள்ள வேண்டுமென்பதும் ஒருசில சமுதாயததிலே இருக்கிறதே, இது இந்து மதத்திலே இருக்கிற நியதியா அல்லது மரபுவழியாக இருக்கிற நியதியா ? அந்நிலையை மாற்றுவதற்கு வழி உண்டா? அரசே பிரச்சாரத்தின் மூலமாக இப்பொழுது இருக்கிற இந்தக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு உண்டான முயற்சியிலே ஈடுபடுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமுதாயத்தில் விதவைகளுக்கான கட்டுப்பாடுகள், பூ வைக்கக் கூடாது, பொட்டு வைக்கக் கூடாது, வெள்ளைப் புடவையைத்தான் கட்ட

வேண்டுமென்பதெல்லாம் இந்து மதத்தினுடைய நியதி அல்ல, பண்டைய காலத்தில் கணவன் மீது அதிக பக்தி செலுத்திய. தெய்வம் போல் கருதிய பெண்கள், கணவன் இறந்ததற்குப் பின்னால் அந்தச் சுகங்களை அனுபவிக்கக் கூடாது என்கின்ற அடிப்படையிலேயும், பிறர் தங்களைப் பார்த்து கணவனுடைய மறைவுக்குப் பின்னால் ரசித்து விடக் கூடாது என்கின்ற அடிப் படையிலேயும், அவற்றையெல்லாம் தாங்களே ஒரு கட்டுப் பாட்டை விதித்து தங்களுக்குள்ளாக இவற்றையெல்லாம் செய்து கொண்டார்கள். அந்தக் கட்டுப்பாடுகள் பிற்காலத்தில் மக்கள் மத்தியிலே ஒரு கட்டுப்பாடாக வளர்ந்து விட்டது. தற்காலத் தில் அவை பல்வேறு வகையில் அரசினுடைய நடவடிக்கைகள், மக்களுடைய மன மாற்றங்கள் இவைகளினால் இன்றைக்கு மாறி வருகின்ற சூழ்நிலையில் விதவை மறுமணம் செய்வதையே அரசு ஆதரிக்கிறது. அரசு அவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது. எல்லா நிகழ்ச்சிகளிலும் அவர்களுக்கு முக்கியத்துவத்தை அளிக் கக்கூடிய வகையில் பணியாற்றுகிறது. ஆகவே, இன்றையதினம் அப்படிப்பட்ட நிலை மாறி வருகின்ற சூழ்நிலையில் அரசு இன்ன மும் தீவிரமான பிரச்சாரத்தை இதற்காகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவை கள்— அவர்களுக்கு மறுமணம் செய்து கொள்வது என்றால் ஒரு ஆண் திருமணம் ஆகாதவராக இருக்க வேண்டும்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி, **என்பதெல்லாம் வேண்டாம். அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. நேரடியாகக் கேள்விக்கு வரவும்.

திரு. வி. கே. சின்னசாமி:**

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவை. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இந்த வினாவிற்கு நீங்கள் பதில் அளிக்க வேண்டிய அவசிய மில்லை. ஏனென்று சொன்னால் இது இந்தத் துறையிலே வராது. (குறுக்கீடு) அவைக் குறிப்பில் (குறுக்கீடு) அந்தக் கேள்வி வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.